# மனிதவளமேலாண்மைத்துறை

## கொள்கைவிளக்கக்குறிப்பு

## 2021-2022

### மானியக்கோரிக்கைஎண்.35


முனைவர்பழனிவேல்தியாகராஜன்

நிதிமற்றும்மனிதவளமேலாண்மைத்துறைஅமைச்சர்



©

தமிழ்நாடுஅரசு

2021

| வ. எண். | பொருள் | பக்க எண். |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | தமிழ்நாடுஅரசுப்பணியாளர்தேர்வாணையம் | 12 |
| 3 | தமிழ்நாடுமாநிலதகவல்ஆணையம் | 18 |
| 4. | மாநில விழிப்புப் பணி ஆணையம் | 23 |
| 5. | ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம் | 24 |
| 6. | ஒழுங்குநடவடிக்கைத் தீர்ப்பாயங்கள் | 30 |
| 7. | லோக் ஆயுக்தா | 32 |
| 8. | ஆய்வுப் பிரிவு | 34 |
| 9. | பயிற்சி | 45 |
| 10. | மின்னணு ஆளுகை முயற்சிகள் | 61 |
| 11. | புதிய முயற்சிகள் | 63 |
| 12. | முடிவுரை | 66 |

| | | |
|---|---|---|
| 13. | இணைப்பு<br>i. தேர்வாணைய தெரிவுகள் குறித்த வரைபடங்கள்<br>ii. பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி நிலைய கட்டமைப்பு பற்றிய புகைப்படங்கள்<br>iii. அண்ணா மேலாண்மை நிலைய பயிற்சிகள் குறித்த வரைபடம் | |

# மனிதவள மேலாண்மைத் துறை

## 2021-2022 - ஆம் ஆண்டிற்கான

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 1. முன்னுரை

“**இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன்கண் விடல்.**”

(குறள் 517 - *தெரிந்து வினையாடல்*)

*(இச்செயலை இக்காரணங்களால் இவன் முடிக்க வல்லவன் என்று ஆராய்ந்து அச்செயலை அவனிடத்தே விடுதல் வேண்டும்.)*

திரு. டி.ஏ. வர்கீஸ், ஐ.சி.எஸ்., அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட நிருவாகச் சீர்திருத்த ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில், அரசுத் துறைகளினிடையே மனித வளங்களை திறம்பட நிருவகிக்கும் வண்ணம், 1976 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் ஆறாம் நாள் பொதுத்துறையிலிருந்து சில பொருண்மைகளைப் பிரித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை உருவாக்கப்பட்டது.

1 (2) பணியாளர்கள் மூலமாகவே ஒரு நிறுவனம் நிமிர்ந்து நிற்கிறது. அவர்கள் வியர்வையாலும் உழைப்பாலும், முயற்சியாலும் அது முன்னேற்றமடைந்து இலக்குகளை நோக்கிப் பயணித்து, நோக்கத்தை அடைந்து வெற்றி பெறுகிறது. இதுகாறும் இத்துறைக்குப் "பணியாளர் நிருவாகம்" என்ற பழம் பெயரே வழங்கப்பட்டு வந்தது. பணியாளர்கள் என்று சொன்னால் அவர்களை நாம் பாரமாகக் கருதுகிறோம் என்று பொருள், பணியாளர்கள் பாரமல்ல, அவர்கள் சமன்செய்து சீர்தூக்கும் துலாபாரங்கள்; நேர்மையாக நிருவாகத்தை நடத்திச்செல்ல வேண்டிய கட்டளைக்கற்கள்; திறமையால் பளிச்சிட வேண்டிய வைரக்கற்கள்; அடுத்தவர்களை மதிப்பீடு செய்ய வேண்டிய எடைக்கற்கள்; ஏழைகளின் வாழ்வு முன்னேற உதவ வேண்டிய படிக்கற்கள்; அத்தகைய பணியாளர்கள் நிருவாகத்தின் மனித வளமாகக் கருதப்பட வேண்டும், நிறுவனத்தின் சொத்துக்களாக மதிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை என்ற பெயரை 'மனிதவள மேலாண்மைத் துறை' என்று மாற்றியமைத்திருக்கிறார்கள்.

1 (3) 'பெயரில் என்ன இருக்கிறது?' என்று மகா காவியங்களை எழுதிய ஷேக்ஸ்பியர் குறிப்பிட்டார். ஆனால் அவர் படைத்த பாத்திரங்களுக்கெல்லாம் குணத்திற்கேற்ப பெயரைச் சூட்டினார். குறள் என்று அழைக்காமல் திருக்குறள் என்றே தெரிவிக்கும் மரபு நம் மண்ணில் உண்டு. எதை எந்தப் பெயரில் அழைக்கிறோம் என்பதும் நம் இலக்கைச் செம்மைப்படுத்தும் என்பதால் இத்தகைய முயற்சி முக்கியமான மாற்றத்தை அலுவலர்கள் மத்தியில் அவசியம் ஏற்படுத்தும்.

1(4) 'மகத்தான மனித வளம்

அதன் மூலம் மக்கள் நலம்'

என்கிற கோட்பாட்டில் செயல்படுவது அரசு அலுவலர்களுடைய தலையாய கடமை. தங்களிடம் வருகிற கோப்புகள் கனமாக இருப்பதற்குக் காரணம் அதில் படிந்திருக்கும் ஏழையின் கண்ணீரோ,

அபலையின் கவலையோ, விதவையின் துயரமோ, திக்கற்றவரின் துன்பமோ என்று நினைத்துப் பணியாற்றும்போதுதான் ஓர் அலுவலர் மனிதவளம் மிகுந்தவராக மாறுகிறார்.

1 (5) மண்ணிலிருந்து எடுக்கப்பட்ட வைரத்தையும் பட்டை தீட்டுகிறபோதுதான் அது பளபளக்கிறது. அதேபோன்று மனித வளத்தை செம்மைப்படுத்துவதால் அவர்களது திறன் மேம்படுகிறது.

மனிதவள மேலாண்மையில், நியமனம், பயிற்சி, மேம்பாடு, ஊக்கம் அளித்தல், நெறிமுறைப்படுத்துதல் போன்ற அனைத்துப் பணிகளும் அங்கங்களாக இருக்கின்றன. இவற்றைத் தமிழகத்தில் இருக்கிற அரசுப் பணியாளர்களுக்கு நிகழ்த்துகின்ற நிறுவனங்கள் அனைத்தும் இந்தத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. இத்துறை, முன்பு, இரண்டு அலகுகளாகச் செயல்பட்டு வந்தது. இந்த இரண்டு அலகுகளும் ஓரிடத்தை நோக்கிச் செல்கிற இரு பாதைகளாக

இரு.க்கின்றன என்பதை அறிந்து அவை 'மனிதவள மேலாண்மை' என்ற ஒற்றைக் குடையின் கீழ் அரசாணை (வாலாய) எண்.2625, பொது (சிறப்பு A) துறை, நாள் 30.06.2021-ல் ஒருங்கிணைக்கப்பட்டு மனித வள மேலாண்மைத் துறை என்று அழைக்கப்படுகிறது.

1. (6) இத்துறையின் முக்கிய பணிகளை நான்கு தொகுதிகளாக வகைப்படுத்தலாம்:

(அ) சட்டபூர்வமானவை

(ஆ) நிருவாகம்

(இ) ஆலோசனை

(ஈ) பயிற்சி

1.(6) (அ) சட்டபூர்வமானபணிகள்

சட்டங்களை நிருவகித்தல்

சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கும், அரசு வழங்கும் சேவைகளுக்குமான இணைப்பு உயிரோட்டமான ஒன்று. இது, பரந்த செயல்பாட்டு

எல்லைகளைக் கொண்ட அரசுப் பணிகளின் தரத்தின் மூலம் வெளிப்படுகிறது. எனவே, சட்டபூர்வ மற்றும் நிருவாக வரையறைகளை, முன்னேற்றத்திற்கு வித்திடும் வகையிலும் சமச்சீர் மரபை பேணிடும் வகையிலும் நிருவகிப்பதன் மூலம் அரசின் செயல்பாடுகளில் ஒழுங்குமுறை உறுதிப்படுத்தப்படுகிறது.

இத்துறை பின்வரும் சட்டங்களை நிருவகிக்கிறது:-

- தமிழ் நாடு அரசுப் பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம், 2016 [தமிழ்நாடு சட்டம் எண். 14/2016];
- தமிழ்நாடு லோக்ஆயுக்தா சட்டம், 2018 (தமிழ்நாடு சட்டம் எண்.33/2018);

1(6) (ஆ) நிருவாகப் பணிகள்

அனைத்து அரசுத் துறை அலகுகளின் அன்றாட நிருவாகத்தில் பணிகள் மற்றும் ஒழுக்கம் தொடர்புடைய பின்வரும் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் பின்பற்றப்படுவதை இத்துறை உறுதி செய்கிறது.

- தமிழ் நாடு அரசுப் பணியாளர்கள் நடத்தை விதிகள், 1973;
- தமிழ் நாடு அரசு அடிப்படை விதிகள்;
- தமிழ் நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள், 1955;
- தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள், 1955;
- தமிழ் நாடு அமைச்சுப் பணிக்கான சிறப்பு விதிகள்;
- தமிழ் நாடு அடிப்படைப் பணிக்கான சிறப்பு விதிகள்.
- தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணிக்கான சிறப்பு விதிகள்;
- தமிழ் நாடு பொதுப் பணிக்கான சிறப்பு விதிகள்-இனம் XII மற்றும் XII-A;
- தமிழ் நாடு பொது சார்நிலைப் பணிக்கான சிறப்பு விதிகள்-இனம் XXII
- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்கு முறைகள், 1954;

- தமிழ்நாடு தகவல் பெறும் உரிமை (கட்டணம்) விதிகள், 2005;
- தமிழ்நாடு தகவல் ஆணைய (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012;
- தமிழ்நாடு தகவல் ஆணையப் பணிவிதிகள், 2017;
- தமிழ்நாடு லோக் ஆயுக்தா விதிகள், 2018.

விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளைப் புதுப்பித்தல்

உலகமயமாக்கல், தாராளமயமாக்கல் மற்றும் தொழில்நுட்பத் தொடர்பு ஆகிய மாற்றங்களின் பெரும் தாக்கத்தினால், நெறிமுறைகளில் தர நிர்ணயம், எளிமைப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் பணியாளர்கள் ஒழுங்குமுறையை கடைபிடிக்கச் செய்தல் இன்றியமையாததாகிறது. இது அரசு பணியாளர்களின் வெளிப்படைத் தன்மையும், பொறுப்புடைமையும் மேம்படுத்தி, அவர்களை தனித்தன்மையுடனான பணியமைப்பாக நிருவகிக்க வழிவகுக்கும். அதற்கேற்ப,

தற்போதுள்ள விதிகள் / ஒழுங்குமுறைகள், அவ்வப்போது மறுபரிசீலனை செய்யப்பட்டு, தேவையற்ற பகுதிகள் நீக்கப்பட்டு, நாளது தேதிவரையிலான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் மூலம் பணியாளர்களிடையே பணி அமைப்பின் முக்கியத்துவம் மற்றும் அதன் இலக்குகள் வலியுறுத்தப்பட்டு தெளிவுப்படுத்தப்படுகிறது.

1(6)(இ) ஆலோசனை வழங்கும் பணிகள்

அரசுப் பணிகளில் ஒரே மாதிரியான நடைமுறைகளைப் பராமரிக்கும் பொருட்டு தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள் மற்றும் தலைமைச் செயலக அறிவுறுத்தங்களின் கீழ் பின்வரும் நேர்வுகள் உள்ளிட்ட பல்வேறு நேர்வுகளில் மனிதவள மேலாண்மைத் துறையை தலைமைச் செயலகத் துறைகள் கலந்தாலோசிக்கின்றன:-

- தமிழ்நாடு மாநிலப் பணிகள் மற்றும் தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணிகளில் உள்ள பல்வேறு பதவிகளுக்கு காலிப் பணியிடமதிப்பீடு மற்றும் தேர்ந்தோர் பெயர் பட்டியல் தயாரித்தல்;

- அரசுப் பணியாளர்களின் பணி வரன்முறை மற்றும் தகுதிகாண் பருவ விளம்பல் நேர்வுகளில் வழிகாட்டுதல் தெளிவுரைகள் வழங்குதல்;
- அடிப்படை விதிகளில் தெளிவுரை வழங்குதல்;
- முதுநிலை திருத்தம் தொடர்பான கருத்துருக்களை ஆய்வு செய்தல்;
- சிறப்பு / தற்காலிக விதிகளை உருவாக்குதல் மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ளும் நேர்வுகளில் ஆலோசனை வழங்குதல்;
- அரசுப் பணியாளர்களின் மீதான ஒழுங்கு நடவடிக்கைகள் குறித்த நேர்வுகளில் ஆலோசனை வழங்குதல்.

1(6)(ஈ) பயிற்சி

அரசுப் பணியாளர்களின் அன்றாட பணிகளிலும் அவர்கள் எதிர்காலத்தில் வகிக்கவேண்டிய பொறுப்புகளிலும் பணித்திறனை மேம்படுத்த, பயிற்சி அளித்தல் இத்துறையின் முக்கியமான செயல்பாடாகும்.

அரசுப் பணியாளர்கள் பணியில் சேரும்பொழுதே, அவர்களின் அடிப்படை திறனை வளர்த்துக் கொள்ளவும், குறிப்பிட்ட துறைகளில் அவர்களின் திறமையையும், மதிப்பையும் கூட்டவும், சவால்களை எதிர்நோக்கும் திண்ணம் கொண்டவர்களாக மேம்படுத்தவும், அவர்களுக்கு பின்வரும் பல்வேறு வகையான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன:-

- அனைத்து அரசுப் பணியாளர்களுக்கும் பணியில் சேரும் போது அடிப்படைபயிற்சி
- பணியில் உள்ள அரசுப்பணியாளர்களுக்கு கட்டாயப்பயிற்சி
- தேவைக்கேற்ற புத்தாக்கப் பயிற்சிகள் (தகவல் அறியும் உரிமை சட்டம், மின் ஆளுமை, இணைய பாதுகாப்பு, போன்றவை )

பொதுப்பணிகளில் பல்வேறு நிலைகளில் உள்ள பதவிகளுக்கான தேர்வுகளில் தேர்ச்சிப்பெற ஏதுவாக தமிழக இளைஞர்களுக்கு இத்துறையால் ஆயத்த பயிற்சி அளிக்கப்படுகிறது.

## 2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

அரசுப் பணியாளர்கள் அரசின் திட்டங்களை செயல்படுத்துவதில் முக்கிய பங்காற்றுகின்றனர். பணியாளர்களை தேர்வு செய்யும் பணிகளுக்காக இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 315(1)-ன் கீழ் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் இயங்கிவருகிறது. தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பணி நிபந்தனைகள் 1954-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளின்படி நிருவகிக்கப்படுகின்றன. தற்போது தேர்வாணையம் தலைவர் மற்றும் ஆறு உறுப்பினர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

### 2 (2) பொதுவான பணிகள்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அரசுப் பணியாளர்களைத் தெரிவு செய்யும் பணிகளுடன் அவர்களுக்கான துறைத் தேர்வுகளை ஆண்டிற்கு இருமுறை நடத்துகிறது.

இளைஞர்கள் தங்களுடைய எதிர்காலத்தில் இந்திய இராணுவ அதிகாரிகளாக உருவாகுவதை

ஊக்குவிக்கும் விதமாக, மத்திய அரசின் பாதுகாப்புத்துறை அமைச்சகத்தின் சார்பாக ஆண்டிற்கு இருமுறை டேராடூன் இந்திய இராணுவக் கல்லூரி நுழைவுத் தேர்வுகளையும் நடத்துகிறது.

மேலும், பணியாளர்களைத் தெரிவு செய்தல் பற்றிய விதிகளை இயற்றுவது, பணி நியமனம், பதவி உயர்வுகள் அளித்தல் மற்றும் ஒரு பணியிலிருந்து மற்றொரு பணிக்கு மாறுதல் முறையில் நியமனம் செய்தல் ஆகியவற்றில் பின்பற்றப்பட வேண்டிய நெறிகளை வகுப்பது மற்றும் அரசுப் பணியாளர்களின் ஒழுங்குமுறை நடவடிக்கைகள் மீதான மேல்முறையீடு குறித்த அனைத்து நேர்வுகளிலும் அரசுக்கு ஆலோசனையினை,தேர்வாணையம் வழங்குகிறது.

2 (3) ஆண்டு திட்ட அட்டவணை

தேர்வர்கள் தங்களை முன்னதாகத் தயார் செய்து கொள்ளவும், துறைகள் தெரிவுத் திட்டத்தினை முன்கூட்டியே அறிந்துகொள்ளவும் ஏதுவாக, ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்தில் தேர்வாணையம் போட்டித் தேர்வுகளுக்கான ஆண்டு திட்ட அட்டவணையை வெளியிடுகிறது.

2 (4) ஒரு முறை பதிவு செய்தல்

தேர்வர்களின் வசதிக்காக, 'ஒரு முறை பதிவு செய்தல்' முறையினை அறிமுகப்படுத்தி அதில் தேர்வர்களின் அடிப்படை விவரங்கள், கையொப்பம் மற்றும் புகைப்படம் தரவுதளத்தில் பதிவேற்றப்படுகிறது. இப்பதிவானது, ஐந்து ஆண்டுகளுக்கு செல்லத்தக்கதாகும். இப்பதிவில் புதிய உள்ளீடுகளை சேர்க்கவும், புதுப்பித்துக் கொள்ளவும் வழிவகை உள்ளது. அனைத்துத் தேர்வுகளுக்கும், இணையதளம் வழியே விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன.

2 (5) தெரிவு நடவடிக்கையில் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துதல்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், திறமையானவர்கள் தெரிவு செய்யப்படுவதை உறுதி செய்ய, உரிய நடைமுறைகளில் பாதுகாப்பினை பலப்படுத்தும் விதமாக, தேர்வு நடைபெறும் மையங்களை ஒளிப்பதிவு செய்தும், தீவிர மேற்பார்வை தேவைப்படும் மையங்களை கண்காணித்தும், ஆணையத்தில் அப்பணிகளை மேற்கொள்ளும் இடங்களை வலை நிழற்படக்கருவி (Web Camera) மூலம் ஒளிப்பதிவும்

செய்கிறது. மேலும், அனைத்துப்போட்டித் தேர்வுகளிலும் தேர்வு எழுதுபவர்களின் பெயர், பதிவு எண், புகைப்படம் போன்ற அனைத்து விவரங்களும் அச்சிடப்பட்ட தன்விவர கொள்குறிவிடைத்தாட்கள் (Personalised OMR) வழங்கப்பட்டு வருகிறது. தொழில்நுட்ப பதவிகளுக்கு கணினி வழி தேர்வினையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

தேர்வு முடிவடைந்த உடன் கொள்குறி வகைக்குரிய விடைகளை (Answer Keys) தேர்வாணையத்தின் இணையதளத்தில் வெளியிட்டு வருகிறது. தேர்வாணையம், இணைய வழியில், பொதுச்சேவை மையங்கள் மூலமாக சான்றிதழ் சரிபார்த்தல் முறையை அறிமுகப்படுத்தியுள்ளதால் செலவும், காலவிரயமும் தவிர்க்கப்படுகிறது. மேலும், அலகு / பணி ஒதுக்கீட்டிற்கு கலந்தாய்வு முறை பின்பற்றப்படுவதற்கு முன்பாக, காலிப் பணியிடங்கள் குறித்த விவரங்கள் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்படுகிறது.

மாற்றுத் திறனாளி விண்ணப்பதாரர்கள் தேர்வு மையங்களை எளிதாக அணுகுவதை தேர்வாணையம் உறுதி செய்கிறது. தேவை ஏற்படின், எழுத்துத் திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு உதவியாளர்கள் தவிரகூடுதல் நேரமும் வழங்கப்படுகிறது.

2(6) துறை பதவிஉயர்வுக் குழு

துறை பதவிஉயர்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்படும் கருத்துருக்களின் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க ஒற்றைச் சாளர முறை, தேர்வாணையத்தால் பின்பற்றப்படுகிறது. தற்போது, பதவி உயர்வு மற்றும் மாறுதல் மூலம் பணி நியமனம் பெறும் தொகுதி A- ஊதிய நிலை 25-க்கு மேல் உள்ள நுழைவு நிலையிலான பதவிகள் மட்டும் தேர்வாணையத்தின் துறை பதவி உயர்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்படுகிறது. ஏனைய அனைத்துப் பதவிகளுக்குமான தேர்ந்தோர் பெயர்ப்பட்டியல் அந்தந்த துறைகளுக்கான பதவி உயர்வு குழுவின் முன் வைக்கப்படுகிறது.

2(7) தெரிவுகளில் முன்னேற்றப் போக்கு

கடந்த ஜனவரி 2020 முதல் ஆகஸ்ட் 2021 வரை மாநில மற்றும் சார்நிலைப் பணிகளில் உள்ள பல்வேறு பணியிடங்களுக்கு, தேர்வாணையம் 12,904 தேர்வர்களை இறுதி செய்துள்ளது.

தெரிவு தொடர்பான தரவுகளை துல்லியமாக ஆராய்ந்து பேணுவதன் மூலம் தேர்வாணையம், அரசிற்கு பணியமர்த்தங்களில் உள்ள வாய்ப்புகள் மற்றும் சவால்களை எதிர்கொள்ளும்வகையிலான தீர்வுகளை எட்டுவதற்கும் அதிகப்படியான எண்ணிக்கையில் தேர்வுகளை திறம்பட நடத்திடவும் உதவுகிறது.

மாநிலத்தின் தெரிவு விவரங்கள் வரைபடங்களாக இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

## 3. தமிழ்நாடு தகவல் ஆணையம்

ஜனநாயகத்தில், பொது விவகாரங்களில் பங்கு பெறுவதற்கான குடிமக்களின் அறிவையும், திறனையும் அதிகப்படுத்துதல் என்ற உறுதியான கொள்கையின் அடிப்படையில், 07.10.2005 அன்று தமிழ்நாடு தகவல் ஆணையம் அமைக்கப்பட்டு, அவ்வாணையம் ஒரு தலைமைத் தகவல் ஆணையர் மற்றும் 6 தகவல் ஆணையர்களைக் கொண்டு இயங்கி வருகிறது.

3(2) 2005-ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ், பொது அதிகார அமைப்பிடம் உள்ள தகவல்களை கேட்பதற்கும், பார்வையிடுவதற்கும் மற்றும் பெறுவதற்கும் குடிமக்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

3 (3) 2005-ஆம் ஆண்டு தமிழ்நாடு தகவல் பெறும் உரிமைச் சட்டம் (கட்டணங்கள்) விதிகளில், கட்டணங்களை செலுத்தும் விதங்கள் மற்றும் வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள விண்ணப்பதாரர்களுக்கு கட்டண விலக்கு ஆகியவை வரையறுக்கப்பட்டுள்ளன.

மேலும், முதல் மேல்முறையீடு மற்றும் இரண்டாம் மேல்முறையீடு ஆகியவற்றிற்கும் விண்ணப்பக் கட்டணங்கள் ஏதுமில்லை.

3 (4) தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழான மனுக்களையும், முதல் மேல்முறையீட்டு மனுக்களையும், இணையவழியில் (www.rtionline.tn.gov.in) கட்டணம் செலுத்தி தாக்கல் செய்வதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. 25.06.2021 முதல், மனித வள மேலாண்மைத் துறையில், மனுக்கள் மற்றும் முதல் மேல்முறையீட்டு மனுக்கள் இணையவழியில் பெறப்பட்டு வருகின்றன. இந்த வசதி தலைமைச் செயலகத்தில் உள்ள அனைத்துத் துறைகளாலும் படிப்படியாக அமல்படுத்தப்படும். இணையவழியில் கட்டணங்களைப் பெற உரிய விதித்திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

3 (5) இணையதளம் மூலமாக இரண்டாம் மேல்முறையீடு செய்யும் வசதியும் ஆணையத்தில்

ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆணையத்தின் வலைதளத்தில், (www.tnsic.gov.in) வழக்கு விவரப் பட்டியல் மற்றும் இரண்டாம் மேல்முறையீட்டின் மீதான ஆணையத்தின் முடிவுகள் பதிவேற்றப்பட்டு வருகின்றன.

3 (6) தகவல் அறியும் உரிமை சட்டம் 2005-ன் கீழ் ஒவ்வொருவருடமும் சுமார் 3.30 இலட்சம் மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்படுகின்றன. இம்மனுக்கள் மீது, மாநிலம் முழுவதுமுள்ள பல்வேறு பொதுத்தகவல் அலுவலர்களாலும் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர்களாலும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

3(7) தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் நோக்கத்தினை முழுமையாக நிறைவேற்றிடும் விதமாகவும், நிலுவையிலுள்ள மனுக்களை குறைக்கும் விதமாகவும், அச்சட்டத்தின்கீழான மனுக்கள் மற்றும் மேல்முறையீட்டு மனுக்களுக்கு தீர்வு காண்பது குறித்து மாநிலம் முழுவதுமுள்ள பொதுத் தகவல் அலுவலர்கள் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர்களுக்கு அவ்வப்போது

பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மேற்படி சட்டத்தை செயல்படுத்துவது தொடர்பாக சம்மந்தப்பட்ட அனைவருக்கும் இந்தப் பயிற்சி அளிக்கப்படும்.

3(8) கோவிட்-19-ன் காரணமாக, ஆணையத்தில் நடைபெறும் இரண்டாம் மேல்முறையீட்டு விசாரணைகள் மெய்நிகர் முறையில் நடத்தப்பட்டன.

3 (9) நாட்டிலேயே ஒரு முன்னோடி முயற்சியாக, பார்வைதிறன் குறைபாடு உடையோர்களின் கோரிக்கையின் பேரில், ஆணையத்தின் முடிவுகள் / ஆணைகள், சென்னையில் அமைந்துள்ள பார்வையற்ற நபர்களுக்கு அதிகாரமயமாக்குதலுக்கான தேசிய நிறுவனத்தின் ஒருங்கிணைப்புடன், பிரெய்லி எழுத்து வடிவில், வழங்கப்படுகிறது.

3 (10) பொதுமக்களுக்கும், பொதுத்தகவல் அலுவலர்களுக்கும் விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் மற்றும் தகவல் அளித்தல் தொடர்புடைய பல்வேறு

நடைமுறைகள் குறித்து தேவையான உதவிகளை, தகவல் ஆணையத்தில் இயங்கிவரும் உதவிமையம் (Help Desk) அளித்துவருகிறது.

3 (11) தமிழ்நாடு தகவல் ஆணையமானது, சென்னை நந்தனத்தில் உள்ள பேர்ன்பேட் அரசு பண்ணை கிராமம் என்ற இடத்தில் புதிதாக கட்டப்பட்ட கட்டடத்தில் தற்போது இயங்கிவருகிறது.

3 (12) மனித வள மேம்பாட்டுத் துறைவாயிலாக இவ்வாணையத்தின் ஆண்டறிக்கை சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுகிறது.

## 4. மாநில விழிப்புப்பணி ஆணையம்

தமிழ்நாடு விழிப்புப்பணி ஆணையம் 1965-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. பொதுப்பணிகளில் நிருவாகரீதியாக ஊழல் தடுப்பு நடவடிக்கைகளில் அரசுக்கு அறிவுரை வழங்குதல், ஊழல் குறித்த ஒவ்வொரு இனங்களிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை வழங்குதல் ஆகியவை இவ்வாணையத்தின் முதன்மையான பணிகளாகும். மாநிலத்தின் சட்டபூர்வ அமைப்புகள், பல்கலைக் கழகங்கள், நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து பொது ஊழியர்கள் மீது விழிப்புப்பணி ஆணையம் தமது வரம்பினை கொண்டுள்ளது.

4 (2) விழிப்புப் பணி ஆணையத்தின் நோக்கங்கள்:

(i) பொது ஊழியர் எவரேனும் நாணயமற்ற வகையில் நடந்து கொண்டதாகவோ அல்லது ஊழல் புரிந்துள்ளதாகவோ அல்லது தன்னுடைய அதிகாரத்தை தவறான அல்லது ஊழல் நோக்கத்திற்காக பயன்படுத்தியதாகவோ அல்லது தனது அதிகாரத்தை உரிய முறையில்

பயன்படுத்தாமை பற்றியோ கூறப்படும் புகார் மீது விசாரணை ஏற்படுத்தும் நடவடிக்கையினை மேற்கொள்ளுதல்:

(ii) இதற்காகத் தேவைப்படும் தகவல் அல்லது புள்ளி விவரங்களை சேகரித்து அரசிற்கு ஊழல் தடுப்பு நடவடிக்கைகளில் உரிய ஆலோசனை வழங்குதல்.

(iii)அரசுத் துறை அல்லது அரசு சார்ந்த நிறுவனம் ஆணையத்தின் பரிந்துரைகளின்மீது எடுத்த நடவடிக்கைககளை கண்காணித்தல்.

5. ஊழல்தடுப்புமற்றும்கண்காணிப்பு இயக்ககம்

பொது நிருவாகத்தில் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை திறம்பட கையாளும் பொருட்டு, முதன்முதலாக 1964ல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம் ஏற்படுத்தப்பட்டது. இந்த இயக்ககத்திற்கு காவல்துறை இயக்குநர் (DGP) நிலையில் ஓர் இயக்குநர் தலைமை வகிக்கிறார். இயக்குநருக்கு உறுதுணையாக இணை இயக்குநர், துணை இயக்குநர், காவல் கண்காணிப்பாளர், காவல் துணை

கண்காணிப்பாளர் மற்றும் சட்ட அலுவலர்கள் உறுதுணையாக பணியாற்றுகிறார்கள். இவ்வியக்ககத்தின் கீழ்பிரிவு அலுவலகங்கள் மாநிலம் முழுவதும் செயல்பட்டு வருகின்றன.

5(2) இயக்ககத்தின் செயல்பாடுகள்:-

i) அரசும், மாநில விழிப்புப்பணி ஆணையமும் பரிந்துரைக்கும் நேர்வுகளில் ஊழல் குற்றச்சாட்டுகள் மற்றும் அது தொடர்பான முறைகேடுகளின் பேரில் விசாரணை மேற்கொள்வது.

ii) இவ்வியக்ககத்தால் சேகரிக்கப்படும் தகவல்களை மற்றும்புள்ளிவிவரங்களை மாநில விழிப்புப்பணி ஆணையருக்கு தெரியப்படுத்துதல்.

iii) பொது மக்களிடமிருந்து பெறப்படும், பொது ஊழியர்கள் மீதான இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான புகார்களின் மீது விசாரணை மேற்கொள்வது.

iv) ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் பெறப்படும் இலஞ்சம் மற்றும் ஊழல்தொடர்பான புகார்களில் நுண்ணறிவுத் தகவல்களை சேகரிப்பது மற்றும்

ஊழல் தடுப்புச் சட்டம் 1988-ன் கீழானகுற்றங்களை புலனாய்வு செய்வது.

v) குறிப்பான புகார்களின் அடிப்படையில், ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடும் அரசு ஊழியர்களை, இலஞ்சம் பெறும்பொழுது, தகுந்த முறைகளைப் பின்பற்றி பொறிவைத்து கையும் களவுமாகப் பிடித்தல்.

5 (3) ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விரைந்து விசாரிப்பதற்காக, சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், சிவகங்கை, திருச்சி, திருநெல்வேலி மற்றும் விழுப்புரம் ஆகிய எட்டு இடங்களில் சிறப்பு நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. அந்தந்த மாவட்டங்களில் உள்ள தலைமைக் குற்றவியல் நீதிமன்றங்களில் பணிபுரியும் முதன்மை அமர்வு நீதிபதிகள் மற்றும் சிறப்பு நீதிமன்றங்களில் பணிபுரியும் சார் நீதிபதிகளுக்கு ஊழல் தடுப்புச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விசாரிக்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

5 (4) ஊழல் தடுப்புச் சட்டம், 1988-ல், பிரிவு 17A-ன்படி பொது ஊழியர்கள் அவர்தம் அலுவலகப் பணிகள் மற்றும் கடமையாற்றும் போது நடைபெற்றதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் மீது விசாரணை அலுவலர்கள் விசாரணை மேற்கொள்ளும் முன்னர் உரிய அதிகார அமைப்புகளிடம் முன் அனுமதி பெறப்படல் வேண்டும். இச்சட்டப் பிரிவின்படி அதிகார அமைப்பு மூன்று மாதங்களுக்குள்ளோ அல்லது எழுத்துப் பூர்வமாக பதிவு செய்யக்கூடிய காரணங்களுக்காக மேலும் ஒரு மாத காலத்திற்குள்ளோ தனது முடிவினைத் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு குறிப்பிடப்பட்ட காலவரையறைக்குள் முன் அனுமதி வழங்கப்படுவதை மாநில விழிப்புப் பணி ஆணையம் கண்காணிக்கிறது.

5(5) இவ்வியக்ககத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் ஊழல் புகார்கள் தொடர்பான வழக்குகளின் ஆண்டு வாரியானபுள்ளி விவரங்கள் இயக்கக இணையதளத்தில் வெளியிடப்பட்டு வருகின்றன. மின்னஞ்சல் வாயிலாக பெறப்படும் புகார்களும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

5 (6) ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தால் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாத இறுதி வாரத்தில் விழிப்புணர்வு வார விழா நடத்தப்படுகிறது. கடந்த 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற விழிப்புணர்வு வார விழாவில், "விழிப்புணர்வு இந்தியா", "வளமான இந்தியா" என்ற கருப்பொருளில் கட்டுரை எழுதுதல், விழிப்புணர்வு வாசகப் பதாகைகள் உருவாக்குதல் உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் பங்கு பெற்றனர்.

5 (7) 2021 - ஆம் ஆண்டுக்கான கருப்பொருள் "**சுதந்திர இந்தியா @ 75. தற்சார்புடன் கூடிய நேர்மை**" ஆகும். ஊழல் தடுப்பு நடவடிக்கைகளில் ஒரு புதிய முயற்சியாக, மத்திய விழிப்புப் பணி ஆணையம் வெளியிட்டுள்ள வழிகாட்டுதலின்படி, துறைகளின் செயல்பாடுகளான நில மேலாண்மை, தகவல் தொழில் நுட்ப பயன்பாடு மற்றும் மின் ஆளுமை உள்ளிட்டவை மீது கண்காணிப்பை அதிகரிக்க வலியுறுத்தப்பட்டுள்ளது. அதற்கேற்ப ஆய்வுப் பிரிவில் உரிய மாதிரி படிவங்கள் சேர்க்கப்படும்.

5(8) அரசுப் பணிகளில் ஊழல் நடவடிக்கைகளை தவிர்ப்பதும், தண்டிப்பதும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தின் குறிக்கோளாகும். அதன்படி இந்த இயக்ககத்திற்கும் ஆய்வுக் குழுவிற்கும் உள்ள உயிரோட்டமான இணைப்பு மேல்நிலை அமைப்புகளில் வலுப்படுத்தப்படும்.

## 6. ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்கள்

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தால் சுமத்தப்படும் ஊழல் தொடர்பான குற்றச்சாட்டுகள் மீது விசாரணை மேற்கொள்ளும் ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்களானது, தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள், 1955-இன் படி தேவையான சாட்சியங்களை விசாரிக்கவும், தொடர்புடைய ஆவணங்களைக் கோருவதற்கும் அதிகாரங்களைப் பெற்ற நீதிமுறை சார்புடைய அமைப்பாகும்.

6 (2) சென்னை, கோயம்புத்தூர், மதுரை, நாகர்கோவில் திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய ஆறு இடங்களில் ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்கள் செயல்பட்டு வருகின்றன. நீதிமுறை சார்புடைய செயல்பாடுகளை இந்திய ஆட்சிப்பணி அலுவலர் / மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் உள்ள ஆணையர் மேற்கொண்டு வருகிறார். ஊழல் தடுப்பு

மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தில் உள்ள குற்றவியல் வழக்குரைஞர்கள் (Prosecutors for Disciplinary Proceedings) தீர்ப்பாய விசாரணைகள் நடத்துவதற்கு உதவி புரிகின்றனர். இத்தீர்ப்பாயம் தனது விசாரணை அறிக்கைகளை அரசின் நிருவாகத் துறைக்கு உரிய ஆணைகள் வெளியிடும் பொருட்டு அனுப்புகிறது.

## நிருவாகத் தீர்ப்பாயங்கள் கையாளும் வழக்குகளின் எண்ணிக்கை

| வ எண் | தீர்ப்பாயம் | 2018 | | | 2019 | | | 2020 | | | 1.8.2021 தேதியில் நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | நிலுவை மற்றும் பெறப்பட்டவை | தீர்வு | நிலுவை | நிலுவை மற்றும் பெறப்பட்டவை | தீர்வு | நிலுவை | நிலுவை மற்றும் பெறப்பட்டவை | தீர்வு | நிலுவை | |
| 1. | சென்னை | 20 | 13 | 7 | 23 | 4 | 19 | 35 | 3 | 32 | 39 |
| 2. | கோயம்புத்தூர் | 50 | 11 | 39 | 45 | 10 | 35 | 41 | 4 | 37 | 43 |
| 3. | மதுரை | 11 | 1 | 10 | 12 | - | 12 | 19 | - | 19 | 27 |
| 4. | நாகர்கோயில் | 33 | 1 | 32 | 33 | 9 | 24 | 29 | 2 | 27 | 27 |
| 5. | திருச்சிராப்பள்ளி | 55 | 12 | 43 | 50 | 12 | 38 | 42 | 5 | 37 | 47 |
| 6. | திருநெல்வேலி | 9 | - | 9 | 13 | - | 13 | 17 | 1 | 16 | 22 |
| | மொத்தம் | | | 140 | | | 141 | | | 168 | 205 |

## 7. லோக் ஆயுக்தா

பொது ஊழியர்களிடையே ஊழலை கட்டுப்படுத்திடும் நோக்கத்துடன், லோக் ஆயுக்தா என்ற அமைப்பு ஏற்ப்படுத்தப்பட்டு, அதற்குரிய தமிழ்நாடு லோக் ஆயுக்தா சட்டம் மற்றும் தமிழ்நாடு லோக் ஆயுக்தா விதிகள் 2018-ஆம் ஆண்டு இயற்றப்பட்டன.

7 (2) தமிழ்நாடு லோக் ஆயுக்தா அமைப்பானது, தலைவர் மற்றும் இரண்டு நீதித்துறை சார்ந்த உறுப்பினர்கள் மற்றும் இரண்டு நீதித்துறை சாராத உறுப்பினர்களுடன் அதன் முழு கட்டமைப்புடன் சென்னை, கிண்டி, சிட்கோ கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

7 (3) ஊழல் புகார்கள் மீது விசாரணை செய்யும்போது, லோக் ஆயுக்தா அதனுடைய விசாரணைப் பிரிவு, விழிப்புப் பணி ஆணையம், அரசு முகவாண்மை மற்றும் அரசு அலுவலரின் சேவைகளை பயன்படுத்தலாம். லோக் ஆயுக்தா, தற்போது விசாரணை தேவைப்படும் நேர்வுகளை விசாரிப்பதற்காக

விழிப்புப்பணி ஆணையத்தின் வழியாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தை அணுகுகிறது.

7 (4) பொது ஊழியர் மீதான குற்றச்சாட்டிற்கான முகாந்திரம் உள்ளதா என்பதனை தமிழ்நாடு லோக் ஆயுக்தா உறுதி செய்யும்.

7 (5) 1988-ஆம் ஆண்டு ஊழல் தடுப்புச் சட்டம், பிரிவு 17A-இன்படி பொது ஊழியர் மீது விசாரணை மேற்கொள்ள உரிய அதிகாரியின் முன் அனுமதி பெறப்பட வேண்டும். லோக் ஆயுக்தா விசாரணைக்காக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்திற்கு பரிந்துரைக்கும் நேர்வுகளுக்கு மேற்குறிப்பிடப்பட்ட பிரிவு பொருந்துவது குறித்து பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

8. ஆய்வுப் பிரிவு

மூத்த அதிகாரிகளைக் கொண்டு துறைத் தலைமை அலுவலகங்களை காலமுறை இடைவெளியில் ஆய்வு செய்ய, அரசு ஒரு திட்டத்தினை அறிமுகம் செய்தது. அதன் தொடர்ச்சியாக, அனைத்து அரசு துறைகளும், ஒரே மாதிரியான செயல்பாடுகள் மற்றும் விதிமுறைகளை ஒருமித்து பின்பற்றுவதை உறுதி செய்வதற்காக, இரண்டு அடுக்குகள் கொண்ட ஆய்வுக் குழுக்கள் 1975-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு அரசு அலுவலகங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

8(2) ஆய்வுப்பணிகளின் நோக்கம் மற்றும் தன்மை, பின்வரும் நிருவாக அடிப்படையிலானது;

(i) அலுவலக நிருவாக அமைப்பினை சரிபார்த்தல் மற்றும் திறனை அதிகரிக்க தேவையான மாற்றங்களை ஏற்படுத்த ஆலோசனை வழங்குதல்,

(ii) தேவைக்கேற்ப பணியாளர்கள்,

(iii) நிதி, தொழில்நுட்ப மற்றும் நிர்வாக செயல்பாடுகளில், துறைத் தலைமையினால் அதிகாரப்பகிர்வு ,


(iv) முக்கியமான இனங்களில், செயல்பாடுகள் மற்றும் நிதி நிர்வாகத்தில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடையப்பட்டுள்ளதை உறுதி செய்தல்,

(v) பொதுமக்கள் குறைபாடுகள் எந்த அளவிற்கு கையாளப்பட்டுள்ளன,

(vi) அலுவலக செயல்பாட்டுத்திறனையும் மற்றும் குறிப்பிட்ட காலத்தில் கோப்புகளை தீர்வு செய்வதை சரிபார்த்தல்,

(vii) பல்வேறு பதிவேடுகளை கூர்ந்தாய்வு செய்தல்

8 (3) **ஆய்வுத் துறை அலகுகள் – இரண்டு அடுக்கு முறை.**



8 (4) 11 மாவட்ட ஆய்வுக்குழுக்களின் எல்லைகள்:

| வரிசை எண் | மாவட்ட ஆய்வுக்குழுவின் தலைமையிடம் | உள்ளடங்கிய மாவட்டங்கள் |
|---|---|---|
| 1. | சென்னை | 1. சென்னை |
| 2. | கோயம்புத்தூர் | 2. கோயம்புத்தூர்<br>3. ஈரோடு<br>4. திருப்பூர்<br>5. நீலகிரி |
| 3. | சேலம் | 6. சேலம்<br>7. தர்மபுரி<br>8. நாமக்கல்<br>9. கிருஷ்ணகிரி |
| 4. | திருநெல்வேலி | 10. திருநெல்வேலி<br>11. தூத்துக்குடி<br>12. தென்காசி<br>13. கன்னியாகுமரி |
| 5. | திருச்சிராப்பள்ளி | 14. கரூர்<br>15. புதுக்கோட்டை<br>16. அரியலூர்<br>17. பெரம்பலூர்<br>18. திருச்சிராப்பள்ளி |

| | | |
|---|---|---|
| 6. | கடலூர் | 19. கடலூர்<br>20. விழுப்புரம்<br>21. கள்ளக்குறிச்சி |
| 7. | வேலூர் | 22. வேலூர்<br>23. திருவண்ணாமலை<br>24. இராணிப்பேட்டை<br>25. திருப்பத்தூர் |
| 8. | மதுரை | 26. திண்டுக்கல்<br>27. தேனி<br>28. மதுரை |
| 9. | தஞ்சாவூர் | 29. தஞ்சாவூர்<br>30. திருவாரூர்<br>31. நாகப்பட்டினம்<br>32. மயிலாடுதுறை |
| 10. | இராமநாதபுரம் | 33. இராமநாதபுரம்<br>34. சிவகங்கை<br>35. விருதுநகர் |
| 11. | காஞ்சிபுரம் | 36. காஞ்சிபுரம்<br>37. செங்கல்பட்டு<br>38. திருவள்ளூர் |

8 (5) அடுக்கு 1-ல் உள்ள ஆய்வு அலகுகளின் பணிகள்;

- மூன்று ஆய்வுக்குழுக்களால் ஒவ்வொரு ஆண்டும் ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய அலுவலகங்கள் இறுதி செய்தல்.

- ஒவ்வொரு ஆய்வுக்குழுவும் முதனிலை ஆய்வுக் குறிப்புகளின் மீதான குறைகளைச் சுட்டிக்காட்டி, அவைகளை தீர்வு செய்ய வேண்டி துறைத்தலைமை / வாரியங்களுக்கு அளித்தல்.

- துறைத் தலைமையிடமிருந்து குறைகளைவு அறிக்கைப் பெறப்பட்ட பின்பு, மூத்த இந்திய ஆட்சிப்பணி அலுவலரால் இறுதி ஆய்வு நடத்தப்பட்டு, தலைமைச் செயலாளர் அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பித்தல்.

- இறுதி ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்ட அனைத்து குறைகளும் நிவர்த்தி செய்யப்பட்டு தொடர்புடைய தலைமைச் செயலக துறையால் ஒருங்கிணைந்த அரசாணை வெளியிடப்படுதல்.

**8 (6) அடுக்கு 2-ல் உள்ள மாவட்ட ஆய்வுக்குழுக்களின் பணிகள்;**

| | | | |
|---|---|---|---|
| i) | விரிவான ஆய்வு | - | ஒரு ஆய்வுக்குழு - மாதத்திற்கு ஒரு அலுவலகம் |
| ii) | திடீர் ஆய்வு | - | ஒரு ஆய்வுக்குழு - மாதத்திற்கு 20 அலுவலகங்கள் |
| iii) | ஊழல் மற்றும் விழிப்புப்பணி அலுவலர்களுடன் இணைந்து ஒருங்கிணைப்பு கூட்டம் நடத்துதல். | - | மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் மாதத்திற்கு ஒரு கூட்டம். |
| iv) | பயிற்சி | - | i) மாவட்ட அளவிலான அதிகாரிகளுக்கு ஒழுங்கு நடவடிக்கைகள் குறித்து ஒரு நாள் பயிற்சி அளித்தல்<br>ii) இரண்டு நாட்களுக்கு அலுவலக நடைமுறைகள் குறித்து இரண்டாம் நிலை அலுவலர்களான கண்காணிப்பாளர் / முதுநிலை உதவியாளர்களுக்கு குறுகிய காலப் பயிற்சி அளித்தல் |
| v) | வரவு செலவு | - | ஊதியம், படிகள், எரிபொருள் போன்ற செலவினங்களுக்கு அரசுக்கு கருத்துரு அனுப்புதல். |

## 8 (7) 2020-21-ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள்:

மூன்று அலகுகளை கொண்ட அடுக்கு-1 (ஆய்வு -குழு 1, 2 மற்றும் 3)

| | ஆண்டு திட்டத்தின் படி இலக்கு | முடிவுற்றது |
|---|---|---|
| துறைத் தலைமை அலுவலகங்களில் முதனிலை ஆய்வுகள் | 36(கொரோனா-19 பெருந்தொற்றால் 15 ஆக மாற்றியமைக்கப்பட்டது ) | 10 |

அடுக்கு-2-11 அலகுகள் உள்ளடக்கியது (11 மாவட்ட ஆய்வுக்குழுக்கள்)

| | ஆண்டு திட்டத்தின் படி இலக்கு | முடிவுற்றது |
|---|---|---|
| விரிவான ஆய்வு | 132 | 75 |
| திடீர் ஆய்வு | 2640 | 1857 |
| மாவட்ட ஆட்சி தலைவரால் விழிப்புப்பணி மற்றும் ஊழல் தடுப்புத் பிரிவு அலுவலகத்துடன் ஒருங்கிணைந்த கூட்டம் | 132 | 45 |

8 (8) முன்னோக்கி பயணித்தல்

ஆய்வுப்பணி நடைமுறைகளானது அதிக காலம் எடுத்துக் கொள்வதாகவும், விரிவானதாகவும் உள்ளன. இதனால், ஆய்வுக்குழுவினருக்கு திட்டமிடுதலிலும், ஆவணப்படுத்துதலிலும் மற்றும் அதன் தொடர்பான செயல்பாடுகளாலும் மனித ஆற்றல் செலவினமும், காலவிரயமும் ஏற்படுகிறது. அலுவலக ஆய்வு பணிகளினால், ஆய்வுக்குட்படும் அலுவலகங்களின் தினசரி நடவடிக்கைகளில் கால தாமதம், இடையூறு மற்றும் இடைநிறுத்தங்கள் ஏற்படுகின்றன. எனவே, இத்துறையானது தகவல் தொழிநுட்ப அடிப்படையில் ஆய்வுத்தகவல்களை குறித்த நேரத்தில் சேகரித்து அதனை பல்வேறு நிலை அலுவலர்களுக்கு தெரிவித்து, தொடர் நடவடிக்கையை உறுதி செய்ய கொள்கை அளவில் ஒரு முடிவு எடுத்துள்ளது.

ஆய்வு குறித்த காரணிகளான சரிபார்ப்பு பட்டியல், திறன் அளவைக் குறியீடு மற்றும் தரநிர்ணயம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக மாற்றப்படும்.

பொது மக்கள் தொடர்பு அதிகளவில் உள்ள அலுவலகம் மற்றும் மிகவும் நலிவடைந்தோர் நலம்பேண சேவைகளை நேரடியாக வழங்கும் துறைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, மக்கள் பணியாற்றுவதில் முன்னுரிமை வழங்கி அரசளவில் ஒரு முத்திரையை பதிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நடைமுறையில் விதிமுறைகளுக்கு இணக்கமான செயல்பாடுகள், விதிகளை மீறிய செயல்பாடுகள் மற்றும் முன்மாதிரியான செயல்பாடுகளை தெரிவிக்கக்கூடிய படிவங்கள் ஆய்வில் கட்டாயமாக்கப்படும். ஆய்வுக் குழுக்களினால் கண்டறியப்படும் விவரங்கள் சீர்திருத்த நடவடிக்கைக்கும், விவரங்களை உடனுக்குடன் பகிர்ந்து கொள்வதற்கும் ஏதுவாக ஒருங்கிணைக்கப்படும்.

மாநில அரசின் மனித வள மேலாண்மைத் துறையின் அதிகார பகிர்வின்கீழ் ஆய்வுக்குழு செயல்பட்டு வருகிறது. எனவே, ஆய்வுக்குழுவின் சட்டபூர்வமான கட்டமைப்பை மீள ஆய்ந்து அதன்செயல்திறன் மேம்பட வழிவகை செய்யப்படும்.

இந்த ஆய்வுக்குழுவின் 2 அடுக்குகளிலும், அலுவலர்கள் பயிற்சியாளர்களாகவும், நடைமுறை விதிகளை கடைபிடிப்பதை உறுதி செய்பவர்களாகவும் இருப்பதால், ஆய்வின் திறனை முழுமையாகப் பெற வேண்டுமெனில், மாவட்ட மற்றும் மாநில அளவில் உள்ள ஆய்வு அலுவலர்களுக்கு விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் தொடர்புடைய பயிற்சிகள் அளிக்க வேண்டியது அவசியமாகிறது.

9. பயிற்சி

பயிற்சியும் முயற்சியும் எழுச்சியை ஏற்படுத்தும் செயல்பாடுகள். சரியான முறையில் பயிற்சி பெறுபவர்கள் நிபுணர்களாகிறார்கள். அவர்கள் காலப்போக்கில் அரசு விதிகளை ஏடுகளில் எழுதாமல் இதயத்தில் எழுதி வைத்துக்கொள்கிறார்கள். திறமையான இளைஞர்களை, பொதுப் பணியில்ஈர்க்கும் மகத்தான பணியை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் திறம்பட மேற்கொண்டு வருகிறது. அலுவலக நிர்வாகம், கோப்பு பராமரிப்பு, அரசு விதிகள்,தணிக்கை தொடர்பான அடிப்படைப் பயிற்சியை அளிப்பதன் மூலம் மட்டுமே அவர்கள் கோப்புகளை கையாளும் திறன் பெறுகிறார்கள்.

பயிற்சியின் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு, மனிதவள மேலாண்மைத் துறை, தலைமைச் செயலக பயிற்சி நிலையம், அண்ணா மேலாண்மை நிலையம், 'அ' மற்றும் 'ஆ' பிரிவினருக்கானஅடிப்படை பயிற்சி நிலையம், பவானிசாகரில் அமைந்துள்ள குடிமைப்

பணியாளர் பயிற்சி நிலையம் என்கிற நான்கு பயிற்சி பிரிவுகளைக் கொண்டு செயல்படுகிறது.

அதே நேரத்தில், தமிழகத்திலிருந்து பளபளக்கும் நேர்மையுடன் சுடர்விடும் அறிவுடன் திகழும் இளைஞர்கள் அகில இந்தியப் பணிகளில் அடியெடுத்து வைத்து நம் மாநிலத்தின் மாண்பைப் பாரெங்கும் பரப்ப வேண்டும் என்பதற்காக அகில இந்திய பணிகளுக்கான குடிமைப்பணி பயிற்சி நிலையம் சென்னையில் செயல்பட்டு வருகிறது. இவற்றைத் தவிர, பாரதியார் பல்கலைக்கழகத்திலும், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திலும் முதல்நிலை தேர்விற்கு இளைஞர்களை ஆயத்தப்படுத்தும் பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவை தவிர, போட்டித் தேர்வு மையங்களும் தமிழக அரசுப் பணிகளுக்காக இளைஞர்களுக்கு வழிகாட்டும் வகையில் நடைபெறுகின்றன.

9 (1) தலைமைச்செயலக பயிற்சி நிலையம்

தலைக்கு மூளைபோல மாநிலத்திற்குத் தலைமைச் செயலகம். மூளை முன்நின்று உத்தரவு பிறப்பித்தால்தான் அவயங்கள் இயங்கி செயல்படத் தொடங்கும். அரசு ஆணைகளிலிருந்துதான் அலுவலகங்களில் நடவடிக்கைகள் தொடங்குகின்றன.

திட்டங்களைத் தீட்டவும் சட்டங்களை வழங்கவும் தலைமைச் செயலகமே தலையாய இடமாக இருக்கிறது. தலைமைச் செயலகத்திற்கு புதிதாக நியமிக்கப்படும் அலுவலர்களுக்கு அடிப்படை பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்கள் இந்தப் பயிற்சியின்போது கோப்புகள் குறித்தும், அரசாணைகள் குறித்தும், நீதிமன்றத் தீர்ப்புகள் குறித்தும், நினைவூட்டு குறிப்புகள் குறித்தும், காலமுறை பதிவேடுகள் குறித்தும் தெரிந்துகொண்டு பணியைச் செம்மையாய்ச் செய்ய தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்கிறார்கள்.

இப்பயிற்சி நிலையம் இதுவரை 100 அணிகளில் உதவிப் பிரிவு அலுவலர்கள், நேர்முக உதவியாளர்கள், உதவியாளர், நேர்முக எழுத்தர், தட்டச்சர்கள் ஆகியோருக்கு அடிப்படைப் பயிற்சி அளித்துள்ளது.

உலகளாவிய பெருந்தொற்று சூழல் காரணமாக, அடிப்படைப் பயிற்சியினை வகுப்பறை சூழலில் நடத்த இயலவில்லை. எனவே, 99 ஆவது மற்றும் 100 ஆவது அணிகளின் அடிப்படை பயிற்சி வகுப்புகள், ஒரு மாற்றுமுறையாக / புதிய முறையில், பயிற்சி பெறுபவர்களுக்கு காணொலிப் பாடங்கள் மின்னஞ்சல் வாயிலாக நடத்தப்பட்டன. ஒரு அணியில் ஒரே நேரத்தில் அதிக எண்ணிக்கையிலான பயிற்சி பெறுபவர்களுக்கு பயிற்சியளிக்க இது வழி வகுத்தது.

9 (2) பயிற்சித் துறைத் தலைவர் அலுவலகம்

பல்வேறு துறைகளில் அளிக்கப்பட்டு வரும் பயிற்சி நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காக, அண்ணா மேலாண்மை நிறுவன இயக்குநர் 22.10.1999 முதல் அலுவல் வழி பயிற்சித்துறை தலைவராக

நியமிக்கப்பட்டார். அலுவல் வழி பயிற்சித் துறை தலைவர் (DGT) பயிற்சி குறித்த ஆலோசனைகளை அரசுக்கு வழங்குகிறார். மேலும், அண்ணா மேலாண்மை நிறுவனம் (AIM) தமிழ்நாடு நிருவாக பயிற்சி நிறுவனமாக அறிவிக்கப்பட்டது. பயிற்சித்துறை தலைவரின் கட்டுப்பாட்டின் கீழ் பின்வரும் பயிற்சி நிறுவனங்கள் செயல்படுகின்றன.

i. "அ" மற்றும் "ஆ" பிரிவு அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சி நிலையம், சென்னை.
ii. அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்
iii. அகில இந்திய குடிமைப் பணித்தேர்வு பயிற்சி மையம், சென்னை.
iv. போட்டித் தேர்வுகள் பயிற்சி மையம்

9 (3) அடிப்படைப் பயிற்சி

(அ) தொகுதி 'அ' மற்றும் 'ஆ' அலுவலர்களுக்கான அறிமுகப் பயிற்சி திட்டம்

தொகுதி 'அ' மற்றும் 'ஆ' அலுவலர்களுக்கான பயிற்சி நிலையம் அண்ணா மேலாண்மை நிலைய வளாகத்தில் அமைந்துள்ள "காஞ்சி" கட்டிடத்தில்

செயல்பட்டு வருகிறது. மாநில அரசின் பல்வேறு துறைகளில் பணிபுரிந்து வரும் நேரடி நியமனம் மற்றும் பதவி உயர்வு பெற்ற தொகுதி 'அ' மற்றும் 'ஆ' அலுவலர்களுக்கு, அலுவலக நிருவாகம், நிதி நிருவாகம், சட்டம், பொது நிதி, பொது நிருவாகம், மேலாண்மைக் கோட்பாடுகள், திட்டமிடல் மற்றும் மேம்பாடு, பொருளாதாரம், கணினி அறிவியல் ஆகிய பொருண்மைகளில் முறையே 35 நாட்கள் மற்றும் 21 நாட்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சி பொது மக்களின் நலனிற்கான நிருவாக மற்றும் செயலாக்க பணிகளை மேற்கொள்ள உதவுகிறது. இப்பயிற்சி நிறுவனம் மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகிறது.

2020-2021 ஆம் நிதி ஆண்டில், தொகுதி 'அ' அலுவலர்கள் 19 பேர் மற்றும் தொகுதி 'ஆ' அலுவலர்கள் 184 பேர் என மொத்தம் 203 அலுவலர்கள் பயிற்சி பெற்றனர்.

(ஆ) அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்

பவானிசாகர், இயற்கை எழில் கொஞ்சும் அழகிய இடம். தூய காற்றும் இனிய சூழலும் அமையப்பெற்ற அந்த இடத்தில் தொடக்கநிலை பணியாளர்களுக்கு, அவர்களுடைய கவனம் சிந்தாமல் சிதறாமல் பயிற்சியில் மட்டுமே முழு கவனத்தைச் செலுத்தும்பொருட்டு நேர்த்தியான சூழலில் இப்பயிற்சி நிலையம் 1974-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

அரசு இயந்திரம் வெற்றிகரமாக செயல்படுவதற்காக அலுவலகப் பயிற்சி / பணி நடைமுறைகள், மக்கள் தொடர்பு மற்றும் கணக்கியல் போன்ற பயிற்சிகள், பணியாளர்கள் தங்களின் பணிகளை திறமையாக மேற்கொள்வதற்காக, கட்டாயப் பயிற்சியாக அளிக்கப்படுகிறது. பயிற்சியின் நிறைவில் நடத்தப்படும் தேர்வில் அவர்கள் தேர்ச்சி பெறவேண்டும். இந்த பயிற்சி நிலையம், அதி நவீன தொழில்நுட்பங்களைக் கொண்டுள்ளது.

பெருந்தொற்று காரணமாக, பொது முடக்கக் காலத்தில் பயிற்சிகள் நிறுத்தி வைக்கப்பட்டன. இதனால் இதுநாள் வரையில், 8,500 அரசுப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படவில்லை.

இந்த பின்னடைவு நிலையைக் குறைத்திட, அனைத்து மாவட்ட தலைமையகங்களில் பரவலாக்கப்பட்ட மற்றும் சுருக்கப்பட்ட அடிப்படை பயிற்சி வகுப்பை நடத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. தெரிவு செய்யப்பட்ட மையங்களில் இணையதளம் வாயிலாகவும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

<u>செயல் திட்டம்</u>

(i) இணையவழிப் பயிற்சி

ஒரு அணியில் 500 பயிற்சி பெறுபவர்கள் வீதம் இணையதளம் வாயிலாக 35 நாட்கள் அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 2021-2022 ஆம் ஆண்டில், மொத்தம் ஆறு அணிகளில் 3000 பணியாளர்கள் பயிற்சியை நிறைவு செய்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ii) பரவலாக்கப்பட்ட வகுப்பறைப் பயிற்சி

மாவட்டங்களில் ஒவ்வொரு அணியிலும் 250 பணியாளர்களுக்கு பரவலாக்கப்பட்ட நேரடி அடிப்படைப் பயிற்சி 37 நாட்களுக்கு நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2021-2022 ஆம் ஆண்டில், 3000 பணியாளர்கள் பன்னிரண்டு அணிகளில் பயிற்சியை நிறைவு செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதன்படி தற்போதைய பின்னடைவு 13 மாதங்களில் முடிவுறும்.

9(4) அண்ணா மேலாண்மை நிலையம்

பணியில் சேர்ந்து பல்லாண்டுகள் ஆனவர்களும் அவ்வப்போது தங்களைப் புதுப்பித்துக்கொள்ள கட்டாய பயிற்சியினை 'மகிழம்பூ' வளாகத்தில் உள்ள அண்ணா மேலாண்மை நிலையம் அளித்து வருகிறது. இப்பயிற்சி நிலையத்தில் இளநிலை உதவியாளர்கள் முதல் இந்திய ஆட்சிப் பணியாளர்கள் வரை அனைவரும் ஏதேனும் ஒரு காலகட்டத்தில் பயிற்சி பெறுகிறார்கள்.

அண்ணா மேலாண்மை நிலையம் (AIM) அண்மைக்காலச் சட்டங்கள், நீதிமன்ற ஆணைகள், தகவல் தொழில்நுட்பத்தில் சிறந்த நடைமுறைகள் குறித்த குறுகிய கால புத்தாக்கப் பயிற்சி அளித்து வருகிறது.

இந்திய அரசால், அவ்வப்போது அனுப்பப்படும் அனைத்திந்திய குடிமைப் பணி அதிகாரிகளுக்கும் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது.

அண்ணா மேலாண்மை நிலையம் (AIM), பல்வேறு துறைகளின் தேவைக்கேற்ப பயிற்சிகளை வழங்கி வருகிறது.

2019-2020 ஆம் ஆண்டில், அண்ணா மேலாண்மை நிலையம் மற்றும் அதன் மதுரை, திருச்சி மற்றும் சேலத்தில் உள்ள மண்டல பயிற்சி நிலையங்கள் மூலமாகவும், 662 பயிற்சித் திட்டங்கள் வாயிலாக 26,288 பணியாளர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியிலுள்ள 2000 பள்ளி ஆசிரியர்களுக்குஒரு புதிய முயற்சியாக தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழில்நுட்பம் (ICT) சார்ந்த பயிற்சி வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளது. இதுவரை 600 ஆசிரியர்களை உள்ளடக்கிய 24 பயிற்சிகள் நடத்தப்பட்டன. சத்துணவுப் பணியாளர்கள், நியாயவிலைக்கடை விற்பனையாளர்கள், கல்வி, சுகாதாரம், சமூக நலம் மற்றும் கருவூலத்துறை அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி நிலையத்தில், பாலின வேறுபாடு நீக்குதல், பெண்களுக்கு அதிகாரமளித்தல், பணியிடத்தில் பெண்களை கண்ணியமாக நடத்துதல் போன்ற சிறப்புப் பயிற்சிகளும் கூடுதலாக நடத்தப்படுகின்றன. குறிப்பிடத்தக்க பயிற்சியாக, மக்கட்தொகைக் கணக்கெடுப்பு பயிற்சியும், வணிகவரித் துறை பணியாளர்களுக்கான பயிற்சிகளும் இப்பயிற்சி நிலையத்தால் மேற்கொள்ளப்பட்டன.

இப்பயிற்சி நிலையத்தில் நடத்தப்படுகின்ற பயிற்சிகளுள், மகத்தான வரவேற்பைப் பெறுகிற ஒரு பயிற்சி, பணி ஓய்வுக்கு முந்தைய கலந்தாய்வு. பணி ஓய்வு பெறப் போகிறவர்கள் பணிக்கொடையை முதலீடு செய்வதற்கும், பணமோசடி நிறுவனங்களிடம் ஏமாந்து விடாமல் விழிப்புணர்வோடு இருப்பதற்கும், ஓய்வு நேரத்தை பயனுள்ள வகையில் மனநிறைவோடு கழிப்பதற்கும், மனநலம் பேணுவதற்கும் ஆலோசனைகள் வழங்கப்படுகிறது.

9(5) பயிற்சியில் நவீன முயற்சிகள்

அரசுப் பணியாளர்கள் மற்றும் பொது மக்களின் நலனுக்காக AIM TN என்ற பெயரில் காட்சி ஊடகப் பாதை (Youtube channel) ஒன்றை அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையம் வடிவமைத்து உருவாக்கியுள்ளது. இந்த ஊடகப் பாதைக்கு 50,000 பேர் பார்வையாளர்களாகவும், 5,000 பேர் சந்தாதாரர்களாகவும் உள்ளனர்.

9(6) அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையம்

தமிழ்நாட்டில் உள்ள சமூகப் பொருளாதார முன்னேற்றத்தில் பின்தங்கிய பிரிவுகளைச் சார்ந்த இளைஞர்கள் அகில இந்தியப் பணிகளுக்குச் செல்ல வேண்டும் என்கிற அடிப்படையில், பட்டியல் இனத்தவர், பழங்குடியினர் & பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கான தேர்வுக்கு முந்தைய பயிற்சி மையங்கள் முறையே 1966 மற்றும் 1971 ஆம் ஆண்டுகளில் துவங்கப்பட்டன. இப்பயிற்சி மையங்கள், 2000 ஆம் ஆண்டில் அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையம் (AICSCC) என பயிற்சித் துறைத் தலைவரின் கட்டுப்பாட்டின் கீழ் ஒன்றிணைக்கப்பட்டது. சென்னையில் உள்ள முதன்மைப் பயிற்சி நிலையம், பசுமைவழிச் சாலையில் அமைதியான சுற்றுப்புறச் சூழலில் அனைத்து வசதிகளுடன் அமைந்துள்ளது. இப்பயிற்சி நிலையத்தின் மண்டல மையங்கள், மதுரை மற்றும் கோயம்புத்தூரில் செயல்படுகின்றன. பட்டியல் இனத்தவர், பழங்குடியினர் & பிற்படுத்தப்பட்டோர்

மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கான தேர்வர்களுக்கான இட ஒதுக்கீட்டு கொள்கைகளின்படி சேர்க்கை மேற்கொள்ளப்படுகிறது. இந்த பயிற்சி மையத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கும் இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் முதனிலைத் தேர்வுப் பயிற்சிக்கு தகுதியுடைய மாணவர்களை தெரிவு செய்வதற்கான நுழைவுத் தேர்வு அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையத்தால் (AICSCC) நடத்தப்படுகிறது. நுழைவுத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு, முதனிலைத் தேர்வை எதிர்கொள்வதற்காக சுமார் ஆறு மாதங்களுக்கு (டிசம்பர் - மே) பயிற்சியளிக்கப்படுகிறது.

முதனிலைத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்கள் முதன்மைத் தேர்வை எதிர்கொள்வதற்காக மூன்று மாதங்களுக்கு (ஜூலை - செப்டம்பர்) முனைப்பான பயிற்சி அளிக்கப்படுகிறது. முதனிலைத் தேர்வில் வெற்றிபெற்ற தமிழ்நாட்டு மாணவர்கள் அனைவரும் முதன்மைத் தேர்வுப் பயிற்சிக்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

முதன்மைத் தேர்வில் வெற்றிகரமாக தேர்ச்சி பெற்ற மாணவர்கள் புதுதில்லியில் நடைபெறும் ஆளுமைத் தேர்வை எதிர்கொள்வதற்கு முன்னரே, அவர்களுக்கு மாதிரி ஆளுமைத் தேர்விற்கான பயிற்சி அளிக்கப்படுகிறது.

சென்னை பயிற்சி மையத்தில் ஒவ்வொரு ஆண்டும் தகுதியுடைய 325 தேர்வர்களுக்கு குடிமைப் பணி தேர்வுகளுக்கான முதனிலை, முதன்மை மற்றும் ஆளுமைத் தேர்வு குறித்த பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்களில் 225 நபர்கள் உள்ளுறை வசதிகள் பெறலாம்.

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்திலும், கோயம்புத்தூர், பாரதியார் பல்கலைக்கழகத்திலும் முதனிலைத் தேர்விற்காக மட்டும் தலா 100 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

முதன்மை பயிற்சிக்காக அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் பயிற்சிக் கையேடுகள் வாங்குவதற்கான செலவினை எதிர்கொள்வதற்காக வருமான உச்சவரம்பைப் பொருட்படுத்தாமல், 225 மாணவர்களுக்கும் மாதமொன்றுக்கு ரூ.3,000/- என மூன்று மாதங்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையமும் AICSCC TN என்ற பெயரில் புதிய காட்சி ஊடகப் பாதை (Youtube channel) ஒன்றை இந்தியாவிலுள்ள அனைத்து ஆர்வலர்களும் பயன்பெறும் வகையில் உருவாக்கியுள்ளது. இந்த ஊடகப் பாதைக்கு 5,02,285 பேர் பார்வையாளர்களாகவும், 23,900 பேர் சந்தாதாரர்களாகவும் உள்ளனர்.

9(7) போட்டித் தேர்வுகள் பயிற்சி மையம்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC), பணியாளர் தேர்வு வாரியம் (SSC), இரயில்வே பணியாளர் தேர்வு வாரியம் (RRB), வங்கிப் பணியாளர் தேர்வு நிறுவனம் (IBPS) மற்றும் ஒருங்கிணைந்த பாதுகாப்பு துறை பணிகள் (CDS) மற்றும் மத்திய, மாநில பொதுத் துறை நிறுவனங்களில், வேலைவாய்ப்பை பெறுவதற்காக தமிழ்நாட்டு இளைஞர்களை தயார்படுத்த போட்டித் தேர்வு பயிற்சி மையங்கள் மாநிலம் முழுவதும் நிறுவப்பட்டு வருகின்றன.

## 1.0. மின்னணு ஆளுகை

குடிமக்களுக்கு அரசு சேவைகளைத் திறம்பட வழங்கும் வண்ணம் வெளிப்படைத் தன்மை பொறுப்புடைமைகளை மேம்படுத்த ஏதுவாக பின்வரும் தகவல் தொடர்பு தொழில் நுட்பமுறைகள் பயன்படுத்தப் படுகிறது:-

- தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005-ன் கீழ்விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கவும் கட்டணங்கள் செலுத்தவும் 25.06.2021 முதல் இணையவழி வசதி இத்துறையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது மற்ற துறைகளிலும் பயன்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.
- இத்துறையினால் நிருவகிக்கப்படும் பல்வேறு சட்டங்கள் மற்றும் விதிகள் https://www.tn.gov.in என்ற தரவுத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.
- இத்துறையினால் வெளியிடப்பட்ட முக்கியமான அரசாணைகளின் மின்னணுத் தொகுப்பு தலைமைச் செயலக அகத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.
- தபால் பகிர்ந்தளிப்பு, தன்பதிவேடு பதிவு/சோதனை (ஆய்வு) ஆகியவற்றிக்கான தேசிய தகவலமைப்பு

மையத்தினால் உருவாக்கப்பட்ட மின்னணு கோப்பு செயலாக்க அமைப்பு (EFPS) இத்துறையில் நடைமுறையில் உள்ளது.

- தலைமைச் செயலகத் துறைகளில் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் தனிப்பட்ட விவரங்கள், பணியாளர் தகவலமைப்பு (PINFOSYS) என்ற மின்னணு தளத்தில் பராமரிக்கப்படுகிறது.
- தலைமைச் செயலக அலுவலர்கள் / ஊழியர்களின் நிருவாகப் பட்டியல் பின்வரும் மின்னணு தளத்தில் பராமரிக்கப்படுகிறது.

  (i) ஏறக்குறைய 400 அலுவலர்களின் விவரப்பட்டியல் http://192.168.149.234/par/est/default.html என்ற இணைப்பில் உள்ளது.

  (ii) ஏறக்குறைய 2400 பணியாளர்களின் விவரப் பட்டியல்கள் http://192.168.149.165/estt/estt.html மற்றும் http://192.168.149.165/estt/esttp.html என்ற இணைப்புகளில் உள்ளது.

## 11. புதிய முயற்சிகள்

- வளர்ச்சிக்கான வாய்ப்புவரம்பு குறைந்த அளவில் உள்ளவர்களையும் கருத்தில் கொண்டு அனைத்துத் தரப்பிற்குமான வளர்ச்சியை உறுதிப்படுத்தும் வகையில், '2010ம் ஆண்டு தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களை அரசின் கீழ் வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் சட்டம்' வாயிலாக தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களுக்கு அரசுப் பணி நியமனத்தில் 20% முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது, மேற்படி முன்னுரிமையானது ஒன்றாம் வகுப்பு முதல் வரையறுக்கப்பட்ட கல்வி தகுதி வரை தமிழில் பயின்றவர்களுக்கு மட்டுமே பொருந்தும் என்று 16.08.2021 நாளிட்ட ஆணையில் தெளிவுரைகள் வெளியிடப்பட்டுள்ளது.

- மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கான 20% ஒதுக்கீட்டில், சிறப்பு ஒதுக்கீடாக மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (வன்னியகுல சத்திரியர்), மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்கள், மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர்களுக்கு முறையே 10.5%, 7%, 2.5% என உள் ஒதுக்கீடு செய்து சட்ட எண்.8/2021 நிறைவேற்றப்பட்டு 26.02.2021 முதல் அமல்படுத்தப்பட்டது. கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் சில பிரிவினர்களுக்கு போதுமான பிரதிநித்துவத்தை உறுதி செய்ய அரசு வேலை வாய்ப்பில் 200 புள்ளி இன சுழற்சி (நெடுமட்ட ஒதுக்கீடு) திருத்தி ஆணை வெளியிடப்பட்டது. மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (வன்னியகுல சத்திரியர்) மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவினைச் சார்ந்த


ஆதரவற்ற விதவை, முன்னாள் படைவீரர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களுக்கான கிடைமட்ட ஒதுக்கீட்டினை திருத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.


- அரசு ஊழியர்களின் நலன் குறிப்பாக பெண் ஊழியர்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் பொறுப்பின் தொடர்ச்சியாக, உயிருடன் இரண்டுக்கும் குறைவான குழந்தைகளைக் கொண்ட திருமணமான பெண் அரசு ஊழியர்களுக்கு அனுமதிக்கப்பட்ட மகப்பேறு விடுப்பை 9 மாதங்களிலிருந்து 12 மாதங்களாக உயர்த்தி அரசாணை (நிலை) எண்.84, மனிதவள மேலாண்மைத் (அவி.3) துறை, நாள்.23.08.2021-ல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இவ்வரசாணை 01.07.2021 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.


## 12. முடிவுரை

இத்துறை பணியாளர்களின் திறனை மேம்படுத்தி தரமான சேவை வழங்குவதன் மூலம் அனைத்துத் தரப்பினருக்குமான உள்ளார்ந்த சமூக வளர்ச்சியை இலக்காக நிர்ணயித்துள்ள அரசின் நோக்கத்தை எய்திட வழிவகை செய்யும்.

**முனைவர் பழனிவேல் தியாக ராஜன்**,
நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை
அமைச்சர்


TNPSC
2019 GROUP-I - DISTRICT WISE SELECTED CANDIDATES
CHENNAI
KANCHEEPURAM
MADURAI
ERODE
VIRUDHUNAGAR
SALEM
SIVAGANGAI
DINDIGUL
NAMAKKAL
VILLUPURAM
CUDDALORE
COIMBATORE
THOOTHUKUDI
THIRUVALLUR
KANNIYAKUMARI
VELLORE
KRISHNAGIRI
DHARMAPURI
TIRUPPUR
TIRUCHIRAPPALLI
TIRUNELVELI
THANJAVUR
PUDUKOTTAI
NAGAPATTINAM
ARIYALUR
PERAMBALUR
KARUR
THIRUVARUR
THIRUVANNAMALAI
THENI
RAMANATHAPURAM
THE NILGIRIS
OTHER THAN TAMIL NADU
33
13
10
10
9
9
8
8
7
6
6
6
5
5
5
4
4
4
3
3
3
3
3
3
3
2
2
1
1
1
1
0
0
0
5
10
15
20
25
30
35
GROUP1



TNPSC
2018 -2019 GROUP-II - DISTRICT WISE SELECTED CANDIDATES
SALEM 95
TIRUNELVELI 88
CHENNAI 88
MADURAI 85
NAMAKKAL 71
ERODE 70
VILLUPURAM 59
CUDDALORE 53
KANCHEEPURAM 52
VIRUDHUNAGAR 50
DHARMAPURI 47
RAMANATHAPURAM 45
THOOTHUKUDI 44
COIMBATORE 41
VELLORE 40
DINDIGUL 38
THIRUVALLUR 37
TIRUPPUR 36
KANNIYAKUMARI 35
THENI 34
TIRUCHIRAPPALLI 32
THIRUVANNAMALAI 29
SIVAGANGAI 28
THANJAVUR 26
PUDUKOTTAI 21
ARIYALUR 18
KARUR 17
NAGAPATTINAM 16
KRISHNAGIRI 16
PERAMBALUR 9
THIRUVARUR 7
THE NILGIRIS 2
OTHER THAN TAMIL NADU 1
0
20
40
60
80
100
GROUP-II




TNPSC
2019 GROUP-IV - DISTRICT WISE SELECTED CANDIDATES
TIRUNELVELI 837
SALEM 595
MADURAI 584
KANCHEEPURAM 490
NAMAKKAL 475
VILLUPURAM 443
THIRUVANNAMALAI 442
DHARMAPURI 425
VELLORE 401
ERODE 371
VIRUDHUNAGAR 357
TIRUCHIRAPPALLI 346
CUDDALORE 343
DINDIGUL 273
THOOTHUKUDI 266
THIRUVALLUR 249
THENI 231
THANJAVUR 223
RAMANATHAPURAM 218
KANNIYAKUMARI 199
KARUR 177
CHENNAI 164
NAGAPATTINAM 163
PUDUKOTTAI 154
SIVAGANGAI 151
KRISHNAGIRI 141
TIRUPPUR 138
ARIYALUR 135
THIRUVARUR 117
COIMBATORE 98
PERAMBALUR 76
THE NILGIRIS 23
OTHER THAN TAMIL NADU 6
0
200
400
600
800
1000
GROUP IV

# TNPSC

## NUMBEROFMEN&WOMENSELECTEDIN2019 EXAM-WISE




TNPSC APPLIED –SELECTED CANDIDATES RATIO FOR THE YEAR 2019
SELECTED
APPLIED
GROUP4
GROUP2
GROUP1
9311
1631648
1330
635212
181
230588
0
200000
400000
600000
800000
1000000
1200000
1400000
1600000
1800000




Civil Service Training Institute,
Bhavanisagar



CivilService Training Institute, Bhavanisagar LIBRARY



Civil Service Training Institute, Bhavanisagar AUDITORIUM



Civil Service Training Institute, Bhavanisagar INDOOR STADIUM



Civil Service Training Institute, Bhavanisagar HOSTEL




Anna Institute of Management Programmes conducted in last 5years